தினகரன் 17
திருச்சி 8 மே 2008

# விராலிமலையில் ஆயுர்வேத பயிற்சி முகாம்

விராலிமலை, மே 8: விராலிமலை அருகே ராஜாளிப் பட்டியில் ராஜாளிப்பட்டி மேட் தாய் நிறுவனமும், மத்திய சுகாதார அமைச்சகமும் இணைந்து ஆயுர்வேத பாரம்பரிய வைத்தியக்காரர்களுக்கான ஆயுர்வேத பயிற்சி முகாம் நடத்தியது.

ராஜாளிப்பட்டி மேட் நிறுகூன அலவலகத்தில் நடைபெற்ற 2 நாள் பயிற்சிக்கு மேட் இயக்குனர் சிரில் அலெக்சாண்டர் தலைமை வகித்தார். வெஸ்வா தொண்டு நிறுவன இயக்குனர் ராஜேஷ்கண்ணா முன்னிலை வகித்தார்.

திண்டுக்கல் காந்தி கிராமத்தில் உள்ள லட்சுமி சேவா சங்கத்தின் டாக்டர்கள் மாரியப்பன், சுந்தரமீனா ஆகியோர் ஆயுர்வேத மருந்துகளின் அறிமுகம், பயன் கள் பற்றி விளக்கம் அளித்தனர். மேலும் ஆயுர்வேத மருந்துகள் தயாரிக்கும் முறைகளையும் விளக்கினர்.

அன்னவாசல் வெல்பர் அசோசியேசன் செயலாளர் முருகேசன், டாக்டர் தாமஸ், புலியூர் கணபதி, பாத்திமாநகர் டாக்டர் தாமஸ், விராலிமலை மனோகரன், ஜெயமங்கலம் ராசு, வீரப்பட்டி, கோபால் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை ஜூனியாமேரி, கிளமெண்ட் ஸ்டானிஸ்லாஸ் ஆகியோர் செய்திருந்தனர்.